**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.319/2018**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : வீரஜோதி | **Caste** | : |
| **Husband Name** | : சண்முகம் | **Calling** | : வீட்டுக்குடித்தனம் |
| **Village** | : கோபால்பட்டி | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 50/2025 |
| | | **Dated** | : 14.11.2025 |

**14.11.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி ஆஜர்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது கோபால்பட்டியில் குடியிருக்கிறேன். வழக்கு தாக்கல் செய்யும்போது சாணார்பட்டியில் குடியிருந்தேன். இந்த புகார் தனிநபர் புகார் என்றால் சரிதான். புகார் ஆங்கிலத்திலும் நிரூபணவாக்குமூலம் தமிழில் இருந்தால் சரிதான். புகார் மற்றும் நிரூபணவாக்குமூலத்தை படித்துபார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் எந்தவேலையும் செய்யாமல் வீட்டுக்குடித்தனத்தில் இருக்கிறேன் என்றால் சரிதான். எதிரியை எப்போது தெரியும் என்றால் கடந்த 10 வருட காலமாக தெரியும். எதிரி எப்போது காசோலை கொடுத்தார் என்றால் 07.07.2017ல்கொடுத்தார். காசோலையை எப்போது வங்கியில் வசூலுக்கு செலுத்தினேன் என்றால் 09.02.2018ல் செலுத்தினேன். மேற்படி காசோலையை 6 மாதம் கழித்துதான் வசூலுக்கு செலுத்தினேன் என்றால் சரிதான். நான் மேற்படி காலதாமத காரணத்தை புகாரிலோ நிரூபணவாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

என் புகாரிலோ , சட்ட அறிவிப்பிலோ எனக்கும் எதிரிக்கும் சட்டப்படியான வரவு செலவு இருந்தது என்று குறிப்பிட வில்லை என்றால் சரிதான். இந்த காசோலை தொடர்பாக எத்தனை முறை நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் இரண்டுமுறை அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 எதிரி கொடுத்த காசோலையா என்றால் சரிதான். அது என்னவகையான காசோலை என சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலையில் 3 மாதம் தான் அதற்கு அவகாசம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலையில் எழுதப்பட்ட எழுத்துக்களும் கையொப்பமும் வெவ்வேறாக உள்ளது என்றால் எதிரி தான் அதை எழுதிகொண்டுவந்தார். என்னிடம் காட்டப்படும் காசோலையில் 2 என்ற எழுத்தானது 1யைத்திருத்தி அழுத்தமாக எழுதிஉள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது எதிரிதான் எழுதியுள்ளார்.

அந்த 2 என்பதை நான்தான் திருத்தி எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஆன செலானில் உள்ள கையொப்பமும் காசோலையில் உள்ள கையொப்பம் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஆன வழக்கிஞர் அறிவிப்பில் தேதி தவறாக குறிப்பிடப்பட்டு அதற்காக மறுஅறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல் அனுப்பிய அறிவிப்பில் 03.03.2018 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எனது வங்கிகணக்கில் அதிகபட்சமாக எவ்வளவு வைத்துள்ளேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை. எனது வங்கிகணக்கின் ஸ்டேட்மெண்டை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாரா என்றால் தயார். கையொப்பம் சம்பந்தமாக கையொப்பம் ஆய்விற்கு அனுப்பி ஆய்வு செய்ய எந்த ஆட்சியபனை இல்லை என்றால் ஆட்சியபனை இல்லை. நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

எதிரி என்மீது சாணார்பட்டி காவல் நிலையத்தில் வட்டிக்கு பணம் கொடுத்தது சம்பந்தமாக புகார் கொடுத்து எதிரிக்கு மனு ரசீது கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் எதிரிரிக்கு கொடுத்த பணம் எவ்வாறு கொடுத்தேன் என்றால் நான் சிறுசேமிப்பில் இருந்து கொடுத்தேன். நான் சேமித்த பணத்திற்கு வரி ஏதும் கட்டவில்லை என்றால் சரிதான். பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக RBI விதி படி பணபரிவர்த்தனை செய்யவேண்டும் என்றால் காசோலை மூலமாக தான் செய்யவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எதிரிக்கு பணம் கொடுக்கும் போது யார் உடன் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை. நான் எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. நான் அனுபபிய வழக்கறிஞர் அறிப்பில் எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல ஒப்புதல் அட்டையை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை சார்பு செய்த அஞ்சல அலுவலரை விசாரித்தால் உண்மை தெரியும் என்ாறல் சரிதான்.

நானும் எனது தாயாரும் வட்டித்தொழில் செய்கிறோம் என்றால் சரியல்ல. என்மீதும் எனது தாயார் மீதும் S.P ஆபிசில் பல்வேறு புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கொடுத்த பணத்திற்கு source of income இல்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படியாக கொடுக்கவேண்டிய பணம் எதும் இல்லை என்றாலும் சரியல்ல. எனது புகாரில் எதிரி எனக்கு கொடுக்கவேண்டிய பணம் 2,00,000/- ரூபாய் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளபோது நிரூபணவாக்குமூலத்தில் 2,03,000/- என்று முன்னுக்கு பின் முரணாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.11.14 14:34:11 +0530

Judicial Magistrate No.II
Dindigul.